செய்தி வெளியீடு எண்:649 நாள் :24.12.2014

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி, இன்று 24.12.2014 மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் தலைமையில் தமிழகத்தில் இயங்கும் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வு கூட்டத்தில் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் இருந்து வெளியேறும் தானாக ஆவியாகக்கூடிய கரிம வேதிக் கூட்டுப் பொருளின் (VOC), காற்றுதர அளவுகள், உபயோகப்படுத்தப்பட்ட கரிம திரவ கழிவுகள் (Spent Solvent) மேலாண்மையின் அவசியம், பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றத்திற்கான அவசியம் மற்றும் பெருநிறுவன சமூக பொறுப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் நல்லாசியோடு, வழிகாட்டுதலோடு இயங்கும் இவ்வரசு, தமிழக மக்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்தும், இந்த ஆலைகளில் இருந்து வெளியேறும் தானாக ஆவியாக கூடிய கரிம வேதிக் கூட்டுப் பொருளின் காற்றுதர அளவுகள், வாரிய தர அளவுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எனவும், உபயோகப்படுத்தப்பட்ட கரிம திரவ கழிவுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ மேலாண்மைப்படுத்தப்பட்டு மறு உபயோகப்படுத்தப்பட வேண்டும் எனவும், பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றத்திற்கான அமைப்பினை நிறுவுவதன் அவசியம் குறித்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் இடர் மதிப்பீடு மேம்பாடு (Periodical Risk Assessment Management) செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் மருந்து தயாரிக்கும் நிர்வாகத்தினருக்கு மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தின் முடிவில் கலந்து கொண்ட தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் தங்களுடைய தொழிற்சாலைகளில் பொறுப்புள்ள வகையில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதாக உறுதியளித்தனர். மேலும் இத்தொழிற்சாலைகளில் உருவாகும் கடைசி நிலை கழிவுகளை மற்ற தொழிற்சாலைகள் பயன்படுத்தும் வகையில் மூலப்பொருளாகவோ

அல்லது எரிபொருளாகவோ உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர். இத்தகையான ஆய்வுக்கூட்டங்களை நடத்தி தங்களுடைய நிலையை தெரியப்படுத்த வாய்ப்பு வழங்கியதற்கும், ஆலோசனைகள் அளித்ததற்கும் அரசுக்கும் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., மாசு கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் கே. கார்த்திகேயன், வாரிய உயர் அதிகாரிகள் மற்றும் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**